(பேரவைத் தலைவர்) 1992 ஏப்ரல் 27

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்'. என்க (ஆம்)

மறுப்போர் இல்லை என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஏ) டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம், சென்னை (இரண்டாம் திருத்த) சட்டமுன் வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு தமிழ் நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம் சென்னை (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1992).

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம், சென்னை (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 17/1992) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது எம். ஜி. ஆர். மெடிக்கல் யூனிவர்சிடி அட்மிஷனைப் பற்றி உள்ள விவரங்களைத்தான் இந்த மசோதாவில் கொண்டுவரப்பட்டுள்ளது. இதனுடைய 'எர்லியர் ஆக்ட்' முன்னாலே என்ன நடந்திருக்கிறது என்ற விவரங்கள் இதிலே

1992 ஏப்ரல் 27] [திரு. சு. முத்துசாமி]

கொடுக்கப்படவில்லை. ஆகையினால், உடனடியாக எங்களுக்கு இதைப்பற்றி டீடெயிலாக எதுவும் சொல்லமுடியாத நிலையில் இருக்கிறது. ஏன் என்று சொன்னால் அதனுடைய 'எர்லியர் ஆக்ட்' இல் என்ன இருந்தது என்று சொல்லப்படவில்லை. மேலும் என்னைப் பொறுத்தவரையில் நம்முடைய மருத்துவ கல்லூரிகளில் நேர்மையாக, நல்ல முறையிலே தேர்வுகள் நடந்து கொண்டிருக்கின்றன. இப்பொழுது எந்த 'ரிட்டும்' வருவதாக நாம் பார்ப்பதில்லை. தெளிவாக நம்முடைய ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது. மேலும் எந்த அளவுக்கு நம்முடைய மாண்புமிகு முன்னாள் முதல்வர் மருத்துவக் கல்லூரிகளிலே ஆட்களைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற நல்ல திட்டத்தைக் கொண்டு வந்தவர். அதற்குப் பின்னாலே தான் 'செல்ப் பைனான்சிங் காலேஜில்' பணம் கொடுக்கின்றவர்களை சேர்த்துக் கொண்டார்கள். ஆனால் அரசாங்கக் கல்லூரிகளில் எல்லாம் நல்லமுறையிலே 'மார்க் பேசிஸ்' முறையில் ஆட்களை எடுக்கின்ற அடிப்படையில் கொண்டு வந்தார். அதுபோன்று திட்டம் வருகின்ற சில டிபார்ட்மெண்டுகளுக்குச் சொல்லப்படுகின்ற அதையும் பழையபடி நல்லமுறையிலே நடத்த வேண்டும் என்று சொல்லிக் கொண்டு இந்தச் சட்டத்தை ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஏன் வந்தது என்று சொன்னால் ஒரு சின்ன பிரச்சினை ஏற்பட்டது. அதாவது பொதுவாக எல்லோரும் பரிட்சை எழுதி வெற்றி பெற்று வருகிறார்கள். அதற்குப் பின்னாலே 'பர்ஸ்ட் இம்ப்ரூவ்மெண்ட்' எழுதுகிறார்கள். அதற்குப் பின்னாலே இரண்டாவது 'இம்ப்ரூவ்மெண்ட்' எழுதுகிறார்கள். 'பர்ஸ்ட் இம்ப்ரூவ்மெண்ட்' எழுதக் கூடியவர்களுக்கு இடம் கொடுக்கலாம் என்று ஒரு முறை ஏற்கனவே நடைமுறையில் இருந்தது. ஆனால் 'செகண்ட் இம்ப்ரூவ்மெண்ட்' எழுதுகிறவர்கள் தங்களுக்கு இடம் வேண்டும் என்று அரசாங்கத்திடம் மனுக் கொடுத்தார்கள். அப்போது அரசாங்கம் என்ன கருதியது என்று சொன்னால், எல்லாப் பாடங்களையும் ஒரே நேரத்திலே எழுதி, முதலில் ரெகுலர் ஸ்டூடன்ட்ஸ் பாஸ் செய்து வருவதற்கும், அதற்குப் பின்னாலே 'இம்ப்ரூவ்மெண்ட்' எழுதுகிறவர்களுக்கும் நிறைய வித்தியாசங்கள் இருக்கின்றன. ரெகுலர் ஸ்டூடன்ட்ஸ் 'இம்ப்ரூவ்மெண்ட்' எழுதுகிறபோது எல்லாவற்றையும் ஒன்றாக எழுதுகிறார்கள். எனவே, அங்கேதான் முழுமையான திறமையும் வெளிப்படுகிறது. அதற்குப் பின்னாலே 'இம்ப்ரூவ்மெண்ட்' என்று வருகின்ற போது, தனித் தனியாக ஒவ்வொரு பாடமாக எழுதுகிறார்கள். பர்ஸ்ட்

@22—4—92 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

இக்ப்ரூவ்மெண்ட்டிலே இருக்கிற பாடம், செகண்ட் இம்ப்ரூவ் மெண்டிலே இருக்கிற பாடம் என்று எழுதுகிற போது, அவர் கள் ரெகுலராக எழுகிற மாணவர்களைவிட சிறப்பாக வந்து விட முடியும். ஏன் என்றால், தனித்தனியாக எழுதுகிற காரணத் தால். ஆனால் அதை நியாயம் என்று ஏற்றுக் கொள்ள முடியாது என்று சொல்லி, பர்ஸ்ட் இம்ப்ரூவ்மெண்டை மட்டும் நாங்கள் அனுமதிப்போம் என்று சொல்லி, இரண்டாவது இம்ப்ரூவ் மெண்டை அனுமதிக்க முடியாது என்று வழக்கு மன்றத்திற்குச் சென்றார்கள். வழக்கு மன்றத்திலே ஒரேயடியாக என்ன தீர்ப்பு வந்தது என்றால், உங்களுக்கு இதிலே ஜுரிஸ்டிக்ஷன் கிடையாது. அரசாங்கம் இதில் எதுவுமே தலையிட முடியாது. காரணம், இதற்கு யூனிவர்சிடிக்குத்தான் அந்தப் பவர் இருக்கிறது உங் களுக்கு, இப்படித்தான் எக்ஸாமினேஷன் வைக்க வேண்டும், இப்படித்தான் மாணவர்களை எடுக்க வேண்டுமென்று சொல் வதற்கு எந்தவிதமான சட்ட பூர்வமான உரிமையும் கிடையாது என்று சொல்லிவிட்ட காரணத்தால்தான் இப்போது நாம்இதைக் கொண்டு வருகிறோம். இதைக் கொண்டு வருகிற காரணத்தால் ஏற்கனவே இருக்கின்ற அட்மிஷன் முறையில் எந்தவிதமான மாற்றமும் வராது. இருக்கின்றவற்றில் சில குறைபாடுகள் ஏதாவது இருந்தால் கூட அந்தக் குறைபாடுகளைக் களைவதற்கு நிச்சயமாக இந்த அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்து, நீங்களே ஆதரித்து இருக்கிறீர்கள், எனவே இதனை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு).

பிற்பகல் 6-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விளக்கம் பெற்றீர்கள் அல்லவா? விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)
மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள் ளப்படுகிறது.

பிரிவு 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 மற்றும் 3 சட்ட முடிவின் பகுதியாக இருக்க வேண் டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)
மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம், சென்னை (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 17/1992, நிறைவேற்றப்பெறவேண்டும்''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஐ) மோட்டார் வாகனங்கள் (இயக்கூர்திகள்) வரிவிதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் (இயக்கூர்திகள்) வரிவிதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/1992), மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்.